




# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com

செவ்வாய், அக்டோபர் 05.2021 | மலர்:10 இதழ்:12



விளம்பர தொடர்புக்கு

9597887847 / 8870884969


# உலகளவில் ஒரே நேரத்தில் முடங்கிய பேஸ்புக், வாட்ஸ்அப், இஸ்டாகிராம்

# நீட் எதிர்ப்பு-12 மாநில முதலமைச்சர்களுக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்

## உ.பி. கலவர உயிரிழப்பு 9 ஆக உயர்வு:விவசாயிகள் குடும்பத்துக்கு தலா ரூ.45 லட்சம் இழப்பீடு



உத்தர பிரதேசத்தின் லக்கிம்பூரில் நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆக அதிகரித் துள்ளது. உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ.45 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.10 லட்சமும் இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளை நேரில் சந்திக்க சென்ற காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கைது செய்யப்பட்டார். சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட பல் வேறு தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். உத்தர பிரதேசத்தின் லக்கிம்பூர் கெரி மாவட்டம், பன்வீர்பூரில் ரூ.117 கோடி மதிப்பிலான 165 திட்டங்களை மாநில துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியா நேற்று முன்தினம் தொடங்கிவைத்தார். இந்த விழாவில் பங்கேற்க ஏராள மான பாஜகவினர் வாகனங்களில் சென்றனர். அப்பகுதியில் வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்திய இடத்தை அவர் கள் கடந்து சென்றனர். அப்போது ஒரு கார் கட்டுப்பாட்டை இழந்து போராட்டக்காரர்கள் மீது மோதியது. இதில் விவசாயிகள் சிலர் உயிரிழந்தனர். ஆத்திரமடைந்த விவசாயிகள் பாஜகவினரின் வாகனங்கள் மீது தாக்கு தல் நடத்தினர். 2 கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இருதரப்பினருக்கும் இடையே மிகப்பெரிய மோதல் ஏற்பட்டு கலவரமாக மாறியது.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, "மத்திய உள்துறை இணை யமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆசிஷ் மிஸ்ரா வேண்டுமென்றே விவசாயிகள் மீது காரை மோத செய்தார். இதில் 4 விவசாயிகள் உயிரிழந்தனர்" என்று தெரிவித்தனர். இதை மறுத்துள்ள பாஜகவினர், "வாகனங்களை குறிவைத்து விவசாயி கள் கற்களை வீசி தாக்குதல் நடத் தினர். இதில் ஒரு கார் நிலை தடுமாறி விவசாயிகள் மீது மோதியது. காரில் இருந்த 4 பேர் உயிரிழந்தனர்" என்று குற்றம் சாட்டினர். லக்கிம்பூர் கலவரம் காரணமாக உத்தர பிரதேசத்தில் பதற்றம் நிலவு கிறது. விவசாய சங்க பிரதிநிதிகளுடன் அரசு, போலீஸ் உயரதிகாரிகள் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு எட்டப்பட்டது. இதன்படி உயிரிழந்த விவசாயி களின் குடும்பங்களுக்கு தலா ரூ.45 லட்சம் இழப்பீடும் காயமடைந்த விவ சாயிகளுக்கு தலா ரூ.10 லட்சம் இழப் பீடும் வழங்கப்படும். உயிரிழந்த விவ சாயிகளின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று உத்தர பிரதேச அரசு அறிவித்தது. கலவரம் தொடர்பாக 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய உள் துறை இணையமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆசிஷ் மிஸ்ரா உட்பட 30 பேர் வழக்கில் சேர்க்கப் பட்டுள்ளனர். கலவரம் குறித்து போலீஸ் வட் டாரங்கள் கூறும்போது, "லக்கிம்பூரில் வாகனம் மோதியதில் விவசாயிகள் நட்சத்திரா சிங் தல்ஜித் சிங், லாவேபிரித் சிங், குருவேந்திர சிங், உயிரிழந்தனர். பாஜக தரப்பில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். ரத்தன் காஷ்யப் என்ற செய்தியாளரும் கல வரத்தில் உயிரிழந்துள்ளார். முதல் கட்ட விசாரணையில் வாகனம் மோதி அவர் உயிரிழந்திருப்பது உறுதி செய் யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தன. போலீஸ் உயரதிகாரி பிரசாந்த் கிஷோர் நிருபர்களிடம் கூறும்போது, லக்கிம்பூர் கலவரம் குறித்து உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை நடத்தப் படும். 8 நாட்களில் உண்மையான குற்றவாளிகள் நீதியின் முன்பு நிறுத்தப் படுவார்கள்" என்று தெரிவித்தார் . முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறும்போது, "விவசாயிகள், பொது மக்கள் அமைதி காக்க வேண்டும். கலவரம் தொடர்பான விசாரணை அறிக்கை வரும் வரை பொறுமை காக்க வேண்டும். பொய்களை நம்ப வேண்டாம். கலவரத்துக்கு காரண மானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதி அளித்தார். மத்திய இணையமைச்சர் அஜஸ் மிஸ்ரா கூறும்போது, "நானோ, எனது மகனோ சம்பவ இடத்தில் இல்லை. எங்கள் மீது உள்நோக்கத்துடன் குற்றம் சாட்டப்படுகிறது" என்று தெரிவித்தார். கலவரத்தில் உயிரிழந்த விவசாயி களின் குடும்பங்களை சந்திக்க காங் கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி நேற்று அதிகாலை லக்கிம் பூருக்கு சென்றார். சீதாபூரில் அவர் கைது செய்யப்பட்டு அங்குள்ள விருந் தினர் மாளிகையில் தங்க வைக்கப் பட்டுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரி வித்து விருந்தினர் மாளிகையை தூய்மை செய்யும் பணியில் பிரி யங்கா காந்தி ஈடுபட்டார். சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், லக்கிம்பூருக்கு செல்வேன் என்று அறிவித்தார். இதைத் தொடர்ந்து லக்னோவில் உள்ள அவரது வீட்டின் முன்பு நேற்று பலத்த போலீஸ் பாது காப்பு போடப்பட்டது. அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். இதை கண் டித்து அவர் தர்ணாவில் ஈடுபட்டார். பஞ்சாப் துணை முதல்வர் சுகீந்தர் நேற்று லக்கிம்பூருக்கு செல்ல முயன் றார் . அவரது கார் சஹரான்பூரில் தடுத்து நிறுத்தப்பட்டது. காங்கிரஸ், சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் தலைவர் கள் பலர் நேற்று வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். லக்கிம்பூர் கெரி மாவட்டத்தில் இணைய சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. அந்த பகுதி முழுவதும் 144 தடையுத்தரவு அமல் செய்யப்பட்டிருக்கிறது.




நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு கோரி கேரளா, மேற்கு வங்கம், ஒடிஷா, ஆந்திரா, சத்தீஸ்கர், டெல்லி, கோவா, பஞ்சாப், மஹாராஷ்ட்ரா, ராஜஸ்தான், தெலங்கானா, ஜார்க்கண்ட் ஆகிய 12 மாநில முதலமைச்சர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடந்த சில ஆண்டுகளில் தேசியத் தகுதி தேர்வு மற்றும் நுழைவுத் தேர்வு அடிப்படையிலான சேர்க்கை செயல்முறை பின்தங்கிய மாணவர்களைப் பாதித்துள்ளதா என்பதை ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களது குழு சமர்ப்பித்த அறிக்கையை இணைத்து அனுப்புவதாக அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் மாற்று சேர்க்கை நடைமுறைகள், அத்தகைய மாற்றுவழிகளை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள், அத்தகைய நியாயமான மற்றும் சமமான முறைகளைச் செயல்படுத்த எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பரிந்துரைக்குமாறு அக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், நீதியரசர் ஏ.கே.ராஜன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், சமீபத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்டம், 2021 என்ற சட்ட முன்வடிவினை நிறைவேற்றியுள்ளதாகவும், அந்தச் சட்ட முன்வடிவின் நகலையும் இக்கடிதத்துடன் இணைத்து அனுப்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.நீட் தேர்வை அறிமுகப்படுத்தும் மத்திய அரசின் நடவடிக்கை கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்றும், மாநில அரசுகளால் நிறுவப்பட்டு நடத்தப்பட்டுவரும் மருத்துவ நிறுவனங்களில் சேர்க்கை முறையை முடிவுசெய்யும் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிப்பதன் மூலம் அரசியலமைப்பு அதிகார சமநிலை மீறப்படுகிறது என்பதே தங்களது நிலைப்பாடாகும் என்றும் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், இது தொடர்பாக, மாநில அரசுகள் உயர் கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறும் முறையைத் தீர்மானிப்பதில் தங்கள் அரசியலமைப்பு உரிமையையும், நிலைப்பாட்டையும் நிலைநிறுத்த வேண்டுமென்று தாங்கள் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார். தனது கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் ஆவணங்களை ஆராய்ந்து, கிராமப்புறங்களில் மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள மாணவர்கள் உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதில் சிரமத்திற்கு உள்ளாவதைத் தடுக்கவும் , அந்தந்த மாநிலத்தைச் சார்ந்த மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிச் செய்யவும் தங்களது ஆதரவைத் தெரிவிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர், நமது அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடி , கல்வித்துறையை நிர்வகிப்பதில் மாநில அரசுகளின் முதன்மையை மீட்டெடுக்க மாநில முதலமைச்சர்கள் அனைவரும் ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, இந்த முக்கியமான பிரச்சனையில் அனைவரது ஒத்துழைப்பையும் தான் எதிர்நோக்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து தமிழ்நாடு அரசு இதுவரை எடுத்துள்ள முயற்சிகள் குறித்து விளக்கி, நீதியரசர் ஏ. கே. ராஜன் குழு அறிக்கையின் மொழிபெயர்ப்பு நகலை பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு, திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேரில் சென்று வழங்கி, இப்பிரச்சனை குறித்து தமிழ்நாட்டின் நிலைப்பாட்டிற்கு அந்தந்த மாநில அரசுகளின் ஆதரவைக் கோர வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார்" இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் இயங்கத் தொடங்கியது வாட்ஸ் அப்



பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தளங்களை பயன்படுத்துபவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக இவை அனைத்தும் நேற்று இரவு முடங்கின. இந்தியாவில் இரவு 9.30 மணி முதல் இவை முடங்கின. இதனால், பொதுமக்கள் பெருமளவில் அவதிக்குள்ளாகியுள்ளனர். அதே வேளையில் டிவிட்டர் தளம் தொடர்ந்து செயல்பட்டது. இந்நிலையில் வாட்ஸ் அப் பயன்பாட்டில் சிலருக்கு பிரச்சினை இருப்பதை அறிவோம். நாங்கள் எல்லாவற்றையும் சரி செய்ய முயன்று கொண்டிருக்கிறோம். விரைவில் அப்டேட் செய்கிறோம் என்று ட்விட்டரில் அந்நிறுவனம் தெரிவித்தது. இதனையடுத்து பேஸ்புக், இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் வேலை செய்யவில்லை என ட்விட்டர் பக்கத்தில் பயனாளர்கள் பலர் பதிவிட்டு அதிருப்தி தெரிவித்தனர். இதனைத்தொடர்ந்து இன்று அதிகாலை 4:47 மணியளவில், வாட்ஸ் அப் நிறுவனம் பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளது. அதேபோல மீண்டும் செயலியை பழையபடி இயக்க வைக்க தேவையான முயற்சிகளை மெதுவாகவும், கவனமாகவும் மேற்கொண்டு வருவதாகவும் டிவிட்டர் வாயிலாக தெரிவித்துள்ளது. மேலும், பயனாளர்களின் பொறுமைக்கு நன்றியையும் வாட்ஸ் அப் நிறுவனம் தெரிவித்துள்ளது.


விளம்பர தொடர்புக்கு

9597887847

8870884969

# முதல்வன் பட ஸ்டைலில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆய்வு.!



தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின் இரண்டு நாள் பயணமாக தருமபுரி சென்றுள்ளார். தருமபுரி அரசு மருத்துவமனையில் தாய் சேய் தீவிர சிகிச்சைப் பிரிவைத் தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து யானை பள்ளம் பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காவிரி ஆற்றில் உள்ள நீர் உறிஞ்சும் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பென்னாகரத்தில் உள்ள ஆதி திராவிடர் நலப்பள்ளிக்குச் சென்ற அவர் அங்கு அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். மாணவர்களிடம் அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைக்கிறதா என்று கேட்டறிந்தார். அதைத்தொடர்ந்து முதல்வரிடம் மாணவர்கள் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர்இ மின்விசிறி முதலியவை அமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதற்கு உடனடியாக அமைத்துத் தர ஏற்பாடு செய்கிறேன் என்று முதல்வர் உறுதி அளித்தார். தொடர்ந்து மாணவர்களுக்கு உணவு சமைக்கும் இடத்திற்குச் சென்ற அவர் மாணவர்களுக்குத் தயார் செய்யப்பட்ட உணவு குறித்துக் கேட்டறிந்தார். உணவு வகைகளைப் பார்த்த அவர் பொரியல் எதுவும் இல்லையா? என்று கேட்டார். மேலும்இ மாணவர் ஒருவர்இ அருகில் நின்ற மாணவரைக் காட்டி இன்றைக்கு இவருக்குப் பிறந்த நாள் என்று சொல்லஇ சம்பந்தப்பட்ட மாணவருக்கு கைகொடுத்து வாழ்த்து தெரிவித்தார் மு. க ஸிடாலின். இதைத் தொடர்ந்து மாணவர்களின் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

# நடிகர் ஷாருக்கானின் மகன் போதைப்பொருள் விவகாரம்



போதைப்பொருள் பயன்படுத்திய விவகாரத்தில் நடிகர் ஷாருக்கானின் மகன் கைது செய்யப்பட்ட நிலையில், போதைப்பொருள் வியாபாரியும் சிக்கினார். மும்பையில் இருந்து கோவா செல்லும் சொகுசு கப்பலில் நடைபெற்ற விருந்தில் போதைப் பொருள் பயன்படுத்துவதாக போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் அந்த கப்பலில் சாதாரணப் பயணிகளை போல சென்று கண்காணித்தபோது, தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை பயன்படுத்தியதாக எட்டு பேரை போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசார் பிடித்து விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்து சென்றனர். பிடிபட்ட 8 பேரில், ஒருவரான பாலிவுட் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானிடம் 20 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டது. இதனையடுத்து ஆர்யன் கான் உள்ளிட்ட மூன்று பேரை போதைப் பொருள் தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து, மும்பையில் உள்ள பந்த்ராஇ அந்தேரி, லோகாண்ட்வாலா உள்ளிட்ட பகுதியில் போதைப்பொருள் தடுப்புப் போலீசார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். சோதனையில், போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் அலுவலகத்தில் அவரிடம், அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.




# வடகிழக்கு பருவ மழை:எதிர்கொள்ள தயாராகும் தமிழ்நாடு அரசு



தமிழ்நாட்டில் விரைவில் வடகிழக்கு பருவ மழை தொடங்க இருக்கிறது. இதனை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே வெள்ள பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளை கண்டறிந்து அதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க மாவட்ட வாரியாக ஆட்சியர் தலைமையில் குழு ஒன்றை அமைத்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்தது ஒரு மாவட்டத்திற்கு ஒரு மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் என தமிழ்நாடு முழுவதும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் வடகிழக்கு பருவ மழை காலத்தில் கால்நடைகளை பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கால்நடை பராமரிப்புத்துறை வெளியிட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பின்வருமாறு: வெள்ளம் தொடர்பான நடவடிக்கைகளை முறையாக கண்காணிக்க மாவட்ட நிலையில் கட்டுப்பாட்டு அறை உருவாக்கப்படும். பொதுமக்கள் அணுகுவதற்கான அவசர தொலைப்பேசி எண் 1800 425 5880 கால்நடை அவசர சிகிச்சை ஊர்தியை அழைக்க 1962 என்ற இலவச எண் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் 1,294 அவசர கால நடவடிக்கைகுழுக்கள் ஏற்பாடு செய்யப்படும். மழையால் பாதிக்கக்கூடிய இடங்களில் கால்நடைகளை பாதுகாக்க 1,749 கால்நடை மீட்பு மையங்கள் மற்றும் தங்குமிடங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

# மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு




2021 ம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்க விஞ்சானிகளான டேவிட் ஜூலியஸ் ஆர்டம் பட்டாஹவுடியனுக்கு வழங்கப்பட்டுள்ளது. வெப்பம் குளிர் மற்றும் தொடுதல் ஆகியவை நரம்பு மண்டலத்தில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் அது அனுப்பும் சமிக்ஞைகள் குறித்த ஆய்வுக்காக இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது . இந்த ஆய்வின் மூலம் நம்மை சுற்றி உள்ள உலகுக்கு நம் உடல் எப்படி பழகிக்கொள்கிறது என்பது பற்றிய ஆழமான புரிதல் ஏற்படுகிறது. அன்றாட வாழ்வில் இந்த உணர்வுகளை நாம் பெரிதாக பொருட்படுத்துவதில்லை என்றும் இந்த ஆய்வின் மூலம் முக்கிய கேள்விக்கு பதில் கிடைத்துள்ளதாக நோபல் பரிசு தேர்வு குழுவின் உறுப்பினர் தெரிவித்துள்ளார். கடந்த வருடம் மருத்துவத்துக்கான நோபல் பரிசு 'ஹெபடைட்டிஸ் சி'வைரஸை கண்டறிந்ததற்காக அமெரிக்க விஞ்ஞானிகள் ஹார்வி ஜே. ஆல்டெர் சார்ல்ஸ் எம். ரைஸ் பிரிட்டிஷ் விஞ்ஞானி மிஷெல் ஹோட்டன் ஆகிய மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது.

## தன் இனிய குரலின் வழியாக என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்

# எஸ்பிபி பற்றி ரஜினிகாந்த் உருக்கம்!



தமிழ் சினிமாவின் உச்ச நட்சத்திரமான நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில்இ சிறுத்தை சிவா இயக்கத்தில் !அண்ணாத்த' படம் உருவாகிவருகிறது. சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு இமான் இசையமைக்கிறார்.அண்மையில் இப்படத்தின் "மோஷன் போஸ்டர்" வெளியாகியிருந்தது இந்நிலையில்இ தற்பொழுது அண்ணாத்த...அண்ணாத்த... என்ற படத்தின் அறிமுகப்பாடலை படக்குழு இன்று வெளியிட்டுள்ளது. இப்பாடலுக்கான வரிகளை விவேகா எழுதஇ மறைந்த பாடகர் எஸ்பிபாலசுப்ரமணியம் பாடியுள்ளார் பாடலின் தொடக்கத்திலேயே இசை மேதை எஸ்பிபிஐயா அவர்களுக்கு எங்கள் இசை வணக்கம் எனக் குறிப்பிட்டு இப்பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது பாடகர் எஸ்பியின் கடைசி படலான அண்ணாத்த அண்ணாத்த" பாடல் குறித்து நடிகர் ரஜினிகாந்த் அவரது ட்விட்ட்ர் பக்கத்தில் " வருடங்கள் என் குரலாக வாழ்ந்த எஸ்பிபி வர்கள் அண்ணாத்தே படத்தில் எனக்காகப் பாடிய பாடலின் படப்பிடிப்பின் போது இதுதான் அவர் எனக்குப் பாடும் கடைசிப் பாடலாக இருக்கும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. என் அன்பு எஸ்பிபி தன் இனிய குரலின் வழியாக என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்" என நெகிழ்ச்சியாக தெரிவித்துள்ளார்.





# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# கடலூர் மாவட்ட செய்திகள்

## கடலூர் மாவட்டத்தில் 14 லட்சம் பேருக்கு கொரோனா தடுப்பூசி

**கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் காலில் விழுந்து கதறி அழுத ஆசிரியை–நெல்லிக்குப்பம் அருகே பரபரப்பு**



கடலூர் மாவட்டத்தில் கொரோனா 3 வது அலை பரவலை தடுக்க மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதையடுத்து தமிழக அரசு உத்தரவின் பேரில் மாவட்டத்தில் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.அதன்படி கடலூர் மாவட்டத்தில் கடந்த மாதம் 12 ந்தேதி நடந்த முதல் கட்ட முகாமில் 88 ஆயிரத்து 190 பேருக்கும், 19 ந்தேதி நடந்த 2 ம் கட்ட முகாமில் 55 ஆயிரத்து பேருக்கும்—29 ந்தேதி நடந்த 3 ம் கட்ட முகாமில் 1 லட்சத்து 15 ஆயிரத்து 590பேருக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதையடுத்து 4 ம் கட்ட கொரோனா தடுப்பூசி முகாம் நடந்தது. இதற்காக ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள கிராம ஊராட்சி அலுவலகங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், தாலுகா அலுவலகங்கள், பேரூராட்சி அலுவலகங்கள், பஸ் நிலையங்கள், ரெயில் நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்கள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் 739 தடுப்பூசி மையங்கள் அமைக்கப்பட்டு இருந்தன.இந்த இடங்களில் கொரோனா தடுப்பூசி முகாம் நடந்தது . கடலூர் மஞ்சக்குப்பம் புனித வளனார் கல்லூரி வளாகம், கடலூர் வண்டிப்பாளையம் நகராட்சி பள்ளி ஆகிய இடங்களில் நடந்த முகாமை மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பொதுமக்களிடம், நீங்கள் தடுப்பூசி போடுவதோடு, அருகில் உள்ளவர்களிடமும் இது பற்றி தெரிவித்து தடுப்பூசி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார். தொடர்ந்து கலெக்டர் பாலசுப்பிரமணியம் நிருபர்களிடம் கூறுகையில், தமிழகம் முழுவதும் இந்த தடுப்பூசி முகாம் நடக்கிறது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் இந்த மாபெரும் முகாம் 700 க்கும் மேற்பட்ட இடங்களில் நடக்கிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், மாவட்டத்தில் இது வரை 14 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதியுள்ள 7 லட்சம் பேருக்கு விரைவில் தடுப்பூசி போடப்படும் என்றார். முகாமில் சுகாதார பணிகள் துணை இயக்குனர் மீரா, தாசில்தார் பலராமன், நகராட்சி ஆணையாளர் மகேஸ்வரி, நகர்நல அலுவலர் அரவிந்த்ஜோதி மற்றும் டாக்டர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## சிதம்பரம் கல்வி மாவட்ட அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை



கடலூர் மாவட்டம் சிதம்பரம் ரெயில்வே பீடர் ரோடு அருகே அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியின் உள்வளாகத்தில் கல்வி மாவட்ட அலுவலகம் இயங்கி வருகிறது. இங்கு ஆசிரியர்களுக்கான பணியிட மாற்றம், வைப்புத்தொகை உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு லஞ்சம் வாங்குவதாக புகார் எழுந்தது. இதையடுத்து கடலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறை இன்ஸ்பெக்டர் சண்முகம் தலைமையிலான 5 பேர் கொண்ட குழுவினர் மாலை 4 மணியளவில் சிதம்பரம் கல்வி மாவட்ட அலுவலகத்திற்கு சென்றனர். தொடர்ந்து அதிகாரிகள் அலுவலக கதவுகளை பூட்டிவிட்டு ஒவ்வொரு அறையாக சென்று சோதனை நடத்தினர். இரவு 8 மணி வரை நடைபெற்ற இந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்து 100 மற்றும் முக்கிய ஆவணங்கள் சிக்கின. இதை போலீசார் கைப்பற்றி கடலூர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு கொண்டு வந்தனர். இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இதேபோல் பெண்ணாடத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு உள்பட பல்வேறு பணிகளுக்கு சார்பதிவாளர் மற்றும் அலுவலர்கள் லஞ்சம் வாங்குவதாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து கடலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறை துணை போலீஸ் சூப்பிரண்டு மெல்வின் ராஜ் சிங் தலைமையில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அமுதா மற்றும் போலீசார் மாலை 4 மணியளவில் பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு சென்றனர். தொடர்ந்து போலீசார் அலுவலக அறை கதவுகளை பூட்டிவிட்டு ஒவ்வொரு அறையாக சென்று சோதனை நடத்தினர். இரவு 8 மணிவரை நடந்த இந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.60 ஆயிரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் சிக்கியது. இதையடுத்து ரூ.60 ஆயிரம் மற்றும் முக்கிய ஆவணங்களை போலீசார் பறிமுதல் செய்து கடலூர் லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்றனர்.தொடர்ந்து, இதுகுறித்து மேலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்ட சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.


## ஊர்காவல் படையில் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடி கடலூரில் போலி டிஎஸ்பி கைது.!





| பெயர் | தந்தைபெயர் | ஊர் |
|---|---|---|
| 1. தமிழ்வேந்தன் | மனோகர் | சிதம்பரம் |
| 2. விக்கி | வினோத்குமார் | பாரதிக்குப்பம் |
| 3. திலிப்குமார் | பாண்டுரங்கன் | சீர்காழி |
| 4. சந்தோஷ்குமார் | ராஜசேகர் | பண்ருட்டி |
| 5. ஸ்ரீநாத் | மணி | கீழ்கவரப்பட்டு |
| 6. டேவிட்குமார் | ஏழுமலை | பாரதிக்குப்பம் |
| 7. தீர்த்தமலை | ஏகாம்பரம் | கீழ்கவரப்பட்டு |

கடலூர், ரெட்டிச்சாவடி காவல் சரகம், பெரிய காட்டுப்பாளையம் கிராமம், மாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் கோபி கே.ரமணன் என்பவரின் மகன் கௌதம்(22). கடலூர் அரசு கலைக் கல்லூரியில் கணினி படிப்பு படித்து இடையில் நின்றவர். இவர், தன்னை காவல்துறை டிஎஸ்பி, மற்றும் ஊர்காவல் படையில் அதிகாரியாக உள்ளதாக மற்றவர்களிடம் கூறி நம்ப வைத்துள்ளார். அந்த வகையில், பண்ருட்டி அடுத்துள்ள கீழ்கவரப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கரும்பு வெட்டும் தொழிலாளி மகாதேவன்(38) என்பவர் மற்றும் கூழ் கடை நடத்தி வரும் சுமதி ஆகியோரிடம் ஊர்காவல் படையில் அதிகாரியாக உள்ளதாக கூறியுள்ளார். மேலும், ரூ.30 ஆயிரம் கொடுத்தால் ஊர்காவல் படையில் வேலை வாங்கி தருவதாகவும், மாத ஊதியம் ரூ.15 ஆயிரம் வரும் எனக்கூறினாராம். இதை நம்பிய மகாதேவன் தனது உறவினர் மகன் தீர்த்தமலை(28) மற்றும் சுமதி தனது மகன் ஸ்ரீநாத்( 24) வேலை வாங்கி தரும்படிக் கூறி கௌதமிடம் பணம் கொடுத்து உள்ளனர்.இதனிடையே , புதுச்சேரி மாநிலம் தவளக்குப்பத்தில் உள்ள ஒரு கணினி மையத்திற்குச் சென்று காவல் துறை அதிகாரி என அறிமுகம் செய்துக்கொண்டு போலியான பணி நியமன ஆணையை தயாரித்து, அதை மேற்படி நபர்களிடம் காட்டி எஞ்சியப்பணத்தை கேட்டு பெற்றுள்ளார். இதனிடையே கௌதம் பணம் வாங்கி வெகு நாட்கள் ஆகியும் வேலை வாங்கித்தராமல் காலதாமதம் செய்து வந்த நிலையில், மகாதேவன் பண்ருட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் வழக்குப்பதிவு செய்து ஆய்வாளர் க.சந்திரன், உதவி ஆய்வாளர் ப.தீபன் மற்றும் காவல் துறையினர் விசாரணை நடத்தி வந்த நிலையில் , அண்ணா கிராமம் பேருந்து நிறுத்தம் அருகே நின்றிருந்த கௌதமை சனிக்கிழமை காலை கைது செய்தனர். பின் அவரிடம் விசாரணை நடத்தியதில் காவல் துறை அதிகாரி எனக்கூறி ஏமாற்றியதை ஒப்புக்கொண்டு உள்ளார். இதையடுத்து, அவரிடம் இருந்து 10 ஆயிரம் பணம், டிஎஸ்பி, சீருடை ஒரு செட், பணி நியமன ஆணை தயாரிக்க பயன்படுத்திய கணினி ஆகியவற்றை காவல் துறையினர் பறிமுதல் செய்தனர். ஊர்காவல் படையில் வேலை வாங்கி தருவதாக கூறி மோசடி — கடலூரில் போலி டிஎஸ்பி கைது மேலும் இவ்வாறு பல பேர் தங்களை காவல் அதிகாரியாக கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றி பணம் பறித்து வருகின்றனர், ஆதலால் மக்கள் ஏமாறாமல் யார் அரசு வேலைக்கு என்று பணம் கேட்டாலும் காவல் துறையினரிடம் தகவல் தெரிவிக்க வேண்டும் என காவல் துறையினர் கூறினர்.




விளம்பர தொடர்புக்கு 9597887847

## கடலூரில் வேலை இல்லாமல் கொத்தனார் வேலைக்கு செல்கிறேன்

# கிராம சபை கூட்டத்தில் கலெக்டர் காலில் விழுந்த ஆசிரியை



கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் அடுத்த குணமங்கலம் ஊராட்சியில் மகாத்மா காந்தி பிறந்த நாளையொட்டி கிராமசபை கூட்டம் நடைபெற்றது. இதற்கு கலெக்டர் பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். கூடுதல் கலெக்டர்கள் ரஞ்சித் சிங், பவன் குமார் கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் முருகவேணி ராஜா வரவேற்றார். கூட்டம் நடைபெற்று கொண்டிருந்த போது, அங்கு வந்த ஒரு பெண் திடீரென்று கலெக்டர் அமர்ந்திருந்த இடத்திற்கு அருகே சென்று அவரது காலில் விழுந்து கதறி அழ தொடங்கினார். அப்போது அவர், தனது பெயர் கொடியரசி. நான் எம். எஸ்சி. , பி. எட். படித்துள்ளேன். ஏற்கனவே தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்தேன். தற்போது கொரோனா தொற்று காலம் என்பதால் எனது வேலையை இழந்து, தற்சமயம் எந்த வேலையும் இல்லாமல் இருந்தேன். இதனால் வேறு வழியின்றி கொத்தனார் வேலைக்கு சென்று வருகிறேன். எனது கணவருக்கும் சரியான முறையில் வேலை இல்லை. எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மேலும் போதிய வருமானம் இல்லாததால் வீட்டுக்கு வாடகையை கூட கொடுக்க முடியாமலும், சாப்பாடு இல்லாமலும் சாவின் விளிம்பில் உள்ளோம். மேலும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் இது நாள் வரை எந்த வேலைக்கான அழைப்பும் வரவில்லை. இது மட்டுமின்றி தாசில்தார் அலுவலகத்தில் பலமுறை மனு அளித்தும் எந்தவித வேலை கிடைப்பதற்கான அழைப்பும் வரவில்லை. ஆகையால் எனக்கு ஏதேனும் ஒருவேலை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி கதறி அழுதார். அப்போது கலெக்டர் பாலசுப்பிரமணியம், அந்த பெண்ணிடம் மனுவாக எழுதி கொடுங்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். பின்னர் அந்த பெண் அங்கிருந்து சென்றார். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. இதை தொடர்ந்து கலெக்டர் பாலசுப்பிரமணியம் பேசுகையில் , பொதுமக்கள் அனைவரும் முக கவசம் அணிவது, தனிமனித இடைவெளி உள்ளிட்டவற்றை கட்டாயம் கடைபிடித்திட வேண்டும். கிராமசபை கூட்டங்கள் மூலம் அந்தந்த கிராம வளர்ச்சிக்கு அனைத்து துறை அதிகாரிகள் உங்கள் கோரிக்கைகளை கேட்டறிந்து அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் கிராமங்கள் முழுமையாக வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக அமையும் . மேலும் வார்டு பகுதிகளில் என்னென்ன மேம்பாட்டு திட்டங்கள் வேண்டும் என்பதை கண்டறிந்து கூறினால் உரிய நடவடிக்கை எடுத்து அந்த திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்தி, அசோக் பாபு , தாசில்தார் பலராமன் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## கடலூரில் வீட்டில் கஞ்சா சாகுபடியில் ஈடுபட்ட

# 2 இளைஞர்கள் கைது



கடலூர் அருகே உள்ள பாதிரிக்குப்பம் பகுதியில் உள்ள ரங்காத்தமன் கோவில் தெருவில் வீட்டில் கஞ்சா செடி வளர்ப்பதாக கடலூர் திருப்பாதிரிப்புலியூர் காவல் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் திருப்பாதிரிப்புலியூர் காவல் நிலைய ஆய்வாளர் கவிதா அவர்களின் தலைமையில் காவல் துறையினர் அந்த பகுதிக்குச் சென்று சோதனை செய்தனர். அப்போது ரங்காத்தமன் கோவில் தெருவில் அடுத்தடுத்து இரண்டு வீடுகளில், பூந்தொட்டியிலும், வீட்டு வாசலிலும் கஞ்சா செடி வளர்த்து வருவதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக செடிகளை வளர்த்த 2 பேரை பிடித்த காவல் துறையினர் அவர்களை திருப்பாதிரிப்புலியூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். மேலும், அங்கே வளர்க்கப்பட்டு வந்த கஞ்சா செடிகளையும் வேருடன் பிடுங்கி கைப்பற்றினர். பின்னர் காவல் துறையினர் தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவர்கள் பாதிரிக்குப்பம் பகுதியை சேர்ந்த ராமச்சந்திரன், விக்னேஸ்வரன் என தெரியவந்தது. மேலும் தொடர்ந்து அவர்களை விசாரணை செய்த பொழுது, அவர்கள் இதனை சில வாரங்களுக்கு முன் தான் வளர்க்க தொடங்கினர் எனவும் மேலும் இதனை ஒரு சோதனை முயற்சியாக வளர்த்து வந்ததாகவும் கூறினர். மேலும் இந்த சோதனையில் நன்றாக வளர்ந்து வந்ததால் இதனை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடலாம் என எண்ணி இருந்துள்ளனர் ஆனால் அப்பொழுது தான் காவல் துறையினரின் சோதனையில் மாட்டிக்கொண்டுதாக தெரிவித்தனர். மேலும் இந்த கஞ்சா செடி வளர்த்ததில் ஒருவரான தப்பி ஓடிய ஜானகிராமன் என்பவரைத் காவல் துறையினர் தேடி வருகின்றனர் . கடலூரில் ஏற்கனவே கஞ்சா, குட்கா போன்ற போதை பொருட்கள் குறித்து பொதுமக்கள் மற்றும் பெற்றோர்கள் இடையே பயத்தை ஏற்படுத்திய நிலையில் தற்பொழுது ஏற்படுத்திய நிலையில் தற்பொழுது வீட்டிலேயே கஞ்சா செடி வளர்த்து வந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இதுகுறித்து, திருப்பாதிரிப்புலியூர் காவல் துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சமீப காலங்களாக கடலூர் மாவட்டத்தில் கஞ்சா, குட்கா போன்ற தடை செய்யப்பட்ட போதை பொருட்களின் புழக்கம் அதிகமாக காணப்படுகிறது, இதனை தடுப்பதற்கு காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனாலும் இவ்வாறு தொடர்ந்து பெருகி வரும் கஞ்சா, குட்கா போன்ற போதை பொருட்களின் புழக்கங்களை தடுப்பதற்கு காவல் துறையினர் இதற்கென தனிப்படை அமைத்து தீவிரமாக சோதனை நடத்தி வருகின்றனர். இதுபோல் இனி வரும் காலங்களில் நடக்காமல் இருக்க காவல் துறையினர் நடவடிக்கைகளை தீவிரமாக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சிதம்பரம் அண்ணாமலை பல்கலை கழக ஊழியர்கள் உண்ணாவிரதம்



சிதம்பரத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக ஊழியர்கள் உண்ணாவிரத போராட்டம் ஈடுபட்டனர் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக கடந்த 2013 ம் ஆண்டு தமிழக அரசு கையகப்படுத்தி அதையடுத்து அங்கு பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பேராசிரியர் தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிக்கு பணி நிறைவு செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர். இந்த நிலையில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கடந்த 12 ஆண்டுகளாக தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி கருணை அடிப்படையில் பணி நியமனம் அமர்த்தப்பட்டு பணியாற்றி வந்தனர் பணி நிரந்தரம் செய்யக்கோரி ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்றக் கோரியும் அண்ணாமலை பல்கலைக்கழக ஊழியர்கள் சங்கத்தினர் பல்கலைக்கழக வளாகத்தில் உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்டனர். நிகழ்ச்சிக்கு அண்ணாமலை பல்கலைக்கழக ஊழியர் சங்க முன்னாள் தலைவர் மனோகரன் தலைமை தாங்கினார் முன்னாள் பொதுச் செயலாளர் ரவி மனோகர் பழனிவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர் மற்றும் பல்கலைக்கழக நிரந்தர ஊழியர்கள் மற்றும் தொகுப்பூதிய உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வீராணம் ஏரியில் விடப்பட்ட 4.40 லட்சம் மீன் குஞ்சுகளை எம்எல்ஏ சிந்தனைசெல்வன் விட்டார்



உள்ளூர் மீனவர் களின் வாழ்வாதாரத்துக்காக வீராணம் ஏரியில் சுமார் 4.40 லட்சம் மீன் குஞ்சுகள் சனிக்கிழமை விடப்பட்டன. இந்தப் பகுதியில் உள்ள 6 உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தில் வீராணம் ஏரி முக்கியப் பங்கு வகிக்கிறது. ஏரிக் கரையோரத்தில் வசிக்கும் உள்நாட்டு மீனவர் கள் பயன்பெற ஏதுவாக ஆண்டுதோறும் லால்பேட்டையில் உள்ள மீன்வளத் துறை சார்பில் மீன் குஞ்சுகள் வளர் க்கப்பட்டு அவற்றை ஏரியில் விடுவது வழக்கம். குறிப்பிட்ட கால இடைவெளியில் உள்நாட்டு மீனவர்கள் குறைந்தளவு கட்டணத்தை அரசுக்கு செலுத்திவிட்டு ஏரியில் மீன்பிடித்து வருகின்றனர். இதன்படி நிகழாண்டு மீன்வளத் துறை சார்பில் இந்திய பெருரக கெண்டையின ரோகு மீன் குஞ்சுகள் சுமார் 4.40 லட்சம் சனிக்கிழமை ஏரியில் விடப்பட்டன. இதற்கான நிகழ்ச்சியில் காட்டுமன்னார்கோவில் தொகுதி எம்எல்ஏ எம்.சிந்தனைச்செல்வன் பங்கேற்று ஏரியில் மீன்குஞ்சுகளை விட்டார். நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ராமதாஸ், கடலூர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை துணை இயக்குநர் எம்.வேல்முருகன், பரங்கிப்பேட்டை மீன்வளத் துறை உதவி இயக்குநர் எம்.குமரேசன், லால்பேட்டை மீன் துறை ஆய்வாளா அஞ்சனாதேவி, மீனவர் கூட்டுறவு சங்க தலைவர் கள் பி.ராமதாஸ், எம்.கலியபெருமாள், பு.சுந்தரேசன், ஆர்.ஜபருல்லாகான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கடலூரில் கூட்டமாக பயணம் செய்யும் மாணவர்கள்

# காற்றில் பறந்த கொரோனா கட்டுப்பாடுகள்.!



கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு பகுதியில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 14 வயது சிறுமி அங்குள்ள பள்ளியில் 8 ம் வகுப்பு படித்து வந்தாள். அவள் அதே பகுதியில் வசிக்கும் தனது உறவினருக்கு இரவு சாப்பாடு கொண்டு செல்வது வழக்கம் . அதன்படி கடந்த12.02.2019 அன்று அந்த சிறுமி, தனது உறவினருக்கு இரவு 7 மணி அளவில் சாப்பாடு கொண்டு சென்றாள். பின்னர் சாப்பாடு கொடுத்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தாள். அந்த சிறுமி சேத்தியாத்தோப்பு— கும்பகோணம் சாலையில் உள்ள அவர்களது குல தெய்வம் கோவில் அருகில் வந்த போது, குமாரக்குடியை சேர்ந்த பாலகுரு மகன் தொழிலாளி திலகர் என்கிற குணசேகரன் (வயது 34) தொழிலாளி கட்டமணியார் என்கிற ஜெயசங்கர் (49) ஆகிய 2 பேரும், அந்த சிறுமியை வழிமறித்தனர். தொடர்ந்து அந்த சிறுமியை திலகர் தாக்கினார். பின்னர் அந்த சிறுமியை 2 பேரும் கடத்தி அங்குள்ள கோவிலுக்கு பின்னால் கொண்டு சென்றனர். அங்கு வைத்து சிறுமியை 2 பேரும் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து விட்டு தப்பி சென்றனர். இதனால் மனமுடைந்த அந்த சிறுமி வீட்டுக்கு வந்து விஷம் குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். உடன் அவரை அக்கம், பக்கத்தினர் மீட்டு சிதம்பரம் பகுதியில் உள்ள ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்றார். இது பற்றி அவரது தாய் சேத்தியாத்தோப்பு மகளிர் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, திலகர், ஜெயசங்கர் ஆகிய 2 பேரையும் போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கு கடலூர் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இதில் அனைத்து விசாரணைகளும் முடிவடைந்த நிலையில், நேற்று நீதிபதி எழிலரசி தீர்ப்பு கூறினார். அதில், இவ்வழக்கில் சிறுமியை தாக்கிய திலகருக்கு 1 ஆண்டு சிறை தண்டனையும், ரூஅபராதமும், அபராத தொகையை கட்ட தவறினால் மேலும் 3 மாத சிறை தண்டணையும் , சிறுமியை கடத்திச்சென்ற குற்றத்திற்காக திலகர், ஜெயசங்கருக்கு தலா 10 ஆண்டு சிறை தண்டனையும் , தலா ரூ.5 ஆயிரம் அபராதமும், அபராத தொகையை கட்ட தவறினால் மேலும் 3 மாதம் சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பு கூறினார். இது தவிர சிறுமியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக2 பேரும் சாகும் வரை ஆயுள் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், இந்த தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீட்டு தொகை கொடுத்து, ஈடு செய்ய முடியாது என்றாலும், அவர் தன்னிச்சையாக வாழ வழிவகை செய்யும் வகையில் 30 நாட்களுக்குள் மாவட்ட கலெக்டர், மாநில அரசு திட்டங்களில் ஏதாவது ஒன்றில் இருந்து பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.10 லட்சம் இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார். இவ்வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் கலாச்செல்வி ஆஜரானார்.



GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா? இப்போது 50%-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
9597887847 / 8870884969

# அகர முதல

அகர முதல உரக்க சொல்வோம்

Aagaramuthalaa மின்னிதழ் www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறை மாவட்டத்தில் 124 ஊராட்சிகளில் கிராம சபா கூட்டம் நடைபெற்றது

## பூம்புகார் சுற்றுலா தலத்தை மேம்படுத்த நடவடிக்கை-அமைச்சர் மதிவேந்தன்

### பூம்புகார் சுற்றுலா தலத்தை அமைச்சர் மதிவேந்தன் ஆய்வு செய்தார்



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் உள்ள சுற்றுலா வளாகத்தில் ரூ.2 கோடியே 57 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் புதிய சுற்றுலா தகவல் மையம், கைவினைப்பொருட்கள் விற்பனைக்கூடம், உணவகம் ஆகியவற்றின் கட்டுமான பணிகளையும் மற்றும் இலஞ்சி மன்றம், சிலப்பதிகார கலைக்கூடம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம், சங்கு, சிற்பி பயணியர் விடுதி உள்ளிட்டவைகளையும் சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா பூம்புகார் உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற எம். பன்னீர்செல்வம் ஆகியோர் உடனிருந்தனர். இவ்வாய்வின்போது சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, தமிழர்களின் பண்பாட்டை வெளிபடுத்தும் விதமாக இருக்கின்ற துறைமுக நகரமான பூம்புகாரை ஆய்வு செய்தோம் இங்கு உள்ள பூம்புகார் சுற்றுலாத்தளமானது கடந்த பத்து ஆண்டுகளாக எந்தவித பராமரிப்பின்றி இருந்து வந்துள்ளது. பூம்புகாரில் இருக்கின்ற இலஞ்சி மன்றம், சிலப்பதிகார கலைக்கூடம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம், சங்கு, சிற்பி இல்லங்கள், பயணியர் விடுதி ஆகியவைகளையும் ஆய்வு செய்தோம்.கடந்த சட்டமன்ற கூட்டத்தொடர் மானியக்கோரிக்கையின்படி பூம்புகார் சுற்றுலாத்தளத்தின் மீது தனி கவனம் செலுத்தி பூம்புகாரின் அழகு, அவற்றின் தொன்மை மாறாமல் மேம்படுத்த ஓர் மிகபெரிய திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது.தற்போது பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் புதிய சுற்றுலா தகவல் மையம், கைவினைப் பொருட்கள் விற்பனைக் கூடம், உணவகம், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி ஆகியவை புதியதாக அமைத்தல் மற்றும் பழைய கட்டிடங்களை புதுப்பித்தல் போன்ற பணிகள் ரூ.2 கோடியே 57லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுவருகிறது . இப்பணிகளை தற்போது ஆய்வு செய்து பணிகளை விரைவுப்படுத்த உத்தரவிட்டுள்ளோம் என சுற்றுலாத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் தெரிவித்தார்.இவ்வாய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், சுற்றுலா வளர்ச்சி கழகம் மண்டல மேலாளர் சபேசன், பொதுப்பணித்துறைசெயற்பொறியாளர் முனியசாமி, மாவட்ட சுற்றுலா அலுவலர் மாதவன், நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ஞானவேலன் பொருளாளர் ஜி.என்.ரவி, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி அமைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி ஒன்றியம் செம்பதானிருப்பு ஊராட்சியில் மகாத்மா காந்தியடிகள் 153வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.மயிலாடுதுறை மாவட்டத்தில் மொத்தம் 241 ஊராட்சிகளில் தேர்தல் நடைபெறும் செம்பனார்கோவில், குத்தாலம் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த 117 ஊராட்சிகளை தவிர மயிலாடுதுறை, சீர்காழி, கொள்ளிடம் ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த 124 ஊராட்சிகளில் கிராம சபா கூட்டம் நடைபெற்றது.செம்பதானயிருப்பு ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைளுக்கெதிரான சமூக தீமை நிராகரிப்பு மற்றும் குழந்தை திருமணத்தை தடுத்தல், பிளாஸ்டிக் ஒழிப்பு ஆகியவைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் பொதுமக்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து கொரோனா பெருந்தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்குதல், வாய்க்கால்கள் சுத்தப்படுத்துதல், அனுமதியின்றி விளம்பரபலகைகள், விளம்பரத்தட்டிகள் பதாகைகள் அகற்றுதல், மழைநீர் சேமிப்பு, தனிநபர் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைத்தல் உள்ளிட்டவைகள் என மொத்தம் 48 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் மாவட்ட ஆட்சியர் லலிதா தெரிவித்ததாவது, மயிலாடுதுறை மாவட்டம் உருவாகி முதல் கிராமசபா கூட்டத்தில் கலந்து கொள்வது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பொதுவாக கிராம சபா கூட்டமானது சுதந்திர தினம், குடியரசு தினம், காந்திஜெயந்தி தொழிலாளர் தினம் ஆகிய தினங்களில் நடத்தப்படுவது வழக்கம். அந்தவகையில் கொரோனா பெருந்தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக கடந்த ஆண்டு முதல் கிராம சபா கூட்டம் நடதப்படாமல் இருந்தது. தற்போது கொரோனா தொற்று பரவலின் சதவிகிதம் குறைந்ததை தொடர்ந்து கிராம சபர் கூட்டம் நடத்தப்படுகிறது. அரசின் திட்டங்கள் ஊராட்சியளவில் கொண்டு சேர்ப்பதற்கு இதுபோன்ற கிராமசபா கூட்டங்கள் மிகவும் உதவியாக உள்ளது.கொரோனா தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முகக்கவசம் அணிவதையும், அடிக்கடி கைகளை கிருமி நாசினி அல்லது சோப்பு கொண்டு சுத்தப்படுத்தி கொள்வதையும், கூட்டத்தில் சமூக இடைவெளியை பின்பற்றுவதையும் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வதினால் எந்தவித பக்கவிளைவுகளும் வராது. பொதுமக்களில் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளவும். பெண்களுக்கு எதிரான குற்றங்களை முற்றிலும் தவிர்த்து, பெண் கல்வியை ஊக்குவித்திட வேண்டும் . பெண்கள் கல்வி கற்றால் அது அவர்களின் வாழ்க்கைக்கு மிகவும் பக்கபலமாக இருக்கும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து 14 விவசாயிகளுக்கு தென்னங்கன்று, இடுபொருட்களை மாவட்ட ஆட்சியர் சட்டமன்ற உறுப்பினர் வழங்கினர்.இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சு.முருகண்ணன், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) கவிதா பிரியா, வருவாய் கோட்டாட்சியர் நாராயணன், ஒன்றியக்குழு தலைவர் கமலஜோதி தேவேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்மொழி, வி.கஜேந்திரன், ஊராட்சிமன்ற தலைவர் எம். லெட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை: ஊராட்சி கிராம சபைக் கூட்டத்தில் எம்எல்ஏ ராஜ்குமார் பங்கேற்பு.!



மயிலாடுதுறை காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மயிலாடுதுறை ஆனந்ததாண்டவபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மயிலாடுதுறை எம்எல்ஏ பங்கேற்பு. நல்லத்துக்குடி ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்தில் நீர்வளத்தை பாதுகாக்க வலியுறுத்தி கோரிக்கை பதாகையுடன் பொதுமக்கள் பங்கேற்றனர். மயிலாடுதுறை ஒன்றியத்தில் 54 ஊராட்சிகள் உள்ளன. காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனந்ததாண்டவபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார் பங்கேற்று கிராம மக்களின் குறைகளை கேட்டறிந்தார். இதேபோல மயிலாடுதுறை ஒன்றியம் நல்லத்துக்குடி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சியில் உள்ள ஒன்பது குளங்களுக்கு செல்லும் நீர் வழித்தடத்தை தூர் வாரி, அனைத்து குளங்களிலும் நீர் நிரப்ப கோரிக்கை விடுத்து பதாகைகளுடன் பொதுமக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

மயிலாடுதுறை அருகே அரசு பள்ளியில் ஆசிரியர் மாணவர்களை கண்டித்ததால்

# பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் தள்ளுமுள்ளு




மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுகா பெரம்பூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதியான கிளியனூர் ஊராட்சியில் அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகின்றது. இங்கு கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ்த்துறையில் ஆசிரியராக மகேந்திரன் என்பவர் பணியாற்றி வருகிறார். இந்நிலையில் கடந்த 30ஆம் தேதி மதியம் மகேந்திரன் வகுப்பில் படிக்கக்கூடிய பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் ஆகாஷ், சுதர்சன், ஹரிஷ், சஞ்சய் ஆகியோர் ஆசிரியரை கிண்டல் செய்ததாக கூறப்படுகின்றது. இந்நிலையில் அந்த மாணவர்களை ஆசிரியர் திட்டி அடித்து உள்ளதாக கூறப்படும் நிலையில் அன்று இரவு பெற்றோர்களிடம் மாணவர்கள் இச்சம்பவத்தை கூறியுள்ளனர். இதுதொடர்பாக பெற்றோர் மற்றும் கிளியனூர் ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோர் பள்ளி தலைமையாசிரியர் கலிவரதனிடம் ஒன்னாம் தேதி வெள்ளிக்கிழமை நேரடியாக சென்று புகார் கொடுத்துள்ளனர். அப்போது அங்கு வந்த தமிழாசிரியர் மகேந்திரன் மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவரிடம் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றி போகவே ஊராட்சி மன்ற தலைவர் முகமது ஹாலித்தை தமிழ் ஆசிரியர் மகேந்திரன் தாக்க முயன்றதால் இரு தரப்புக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதில் ஆசிரியருக்கு சிறிது காயம் ஏற்பட்டதுடன் இச்சம்பவம் தொடர்பாக பெரம்பூர் காவல் ஆய்வாளர் சிவதாஸ் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பள்ளிக்கு நேரடியாக வந்த அதிகாரிகள் இருதரப்பினிடமும் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை அறிக்கை உயரதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு தொடர்ந்து விசாரணை நடத்த உள்ளதாக தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து பள்ளியின் முன்ஏராளமான பொதுமக்கள் திரண்டதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வித்துறை அதிகாரிகள் வாக்குறுதி அளித்ததன் பேரில் பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர் , பெற்றோர் மற்றும் ஆசிரியர் என இரு தரப்பினரும் பெரம்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ள நிலையில் காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மயிலாடுதுறையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தள்ளு வண்டி மூலம் பாடம் நடத்தும் ஆசிரியர்!



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே நிம்மேலி –நெப்பத்தூர் ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருபவர் சீனிவாசன். கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா தொற்று காரணமாக பள்ளிகள் செயல்படாமல் உள்ள நிலையில் தனியார் பள்ளி மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் மூலம் பாடங்கள் நடத்தப்பட்டு வருகிறது. கிராமப்புற மாணவர்களுக்கு அரசின் கல்வி தொலைக்காட்சி வாயிலாக பாடங்கள் நடத்தப்பட்டாலும் பல வீடுகளில் வறுமையின் காரணமாக தொலைக்காட்சி செயல்படாமல் உள்ளது. பெற்றோர்கள் தின விவசாய கூலி பணிக்கு செல்வதால் கிராமப்புற ஏழை எளிய மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருகிறது. இதனைக் கருத்தில் கொண்ட ஆசிரியர் சீனிவாசன் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி பாதிக்காத வகையில் கடந்த சில மாதங்களாக தனது சொந்த செலவில் நடமாடும் வீல் சேர் மூலம் எல். இ. . டி டி. வி . பொருத்தி மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று மாணவர்களை ஒருங்கிணைத்து பாடங்களை நடத்தி வருகிறார். இதற்காக சீனிவாசன் எல். இ. டி. டி . வி, ஸ்பீக்கர், இணைய வசதி ஆகியவற்றை தனது சொந்த செலவில் வாங்கிபொருத்தி தள்ளுவண்டி மூலம் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை மாணவர்களின் வீடுகளுக்கு சென்று கல்வி கற்பித்து வருகிறார். நிம்மேலி நடுத்தெரு, தெற்கு தெரு, வடக்கு தெரு என ஒவ்வொரு பகுதிகளிலும் எல்இடி பொருத்தப்பட்ட வீல் சேரை தள்ளிக் கொண்டு சென்று கல்வி தொலைக்காட்சி மூலம் பாடங்களை மாணவர்களுக்கு கற்பித்து அதன் மூலம் சந்தேகங்களை தெளிவு படுத்தி வருகிறார். மாணவர்களை சமூக இடைவெளியுடன் அமர செய்து, முக கவசம் அணிய வைத்து ஒவ்வொரு பகுதியாக நாள்தோறும் சென்று மாணவர்களுக்கு கல்வியை கற்றுக் கொடுத்து வருகிறார், ஆசிரியரின் இந்த புதிய முயற்சிக்கு பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

## இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற ரூ.1 கோடி மதிப்பிலான கஞ்சா பறிமுதல்



நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்குப் படகு மூலம் கஞ்சா கடத்த இருப்பதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, சுங்கத்துறை உதவி ஆணையர் செந்தில்நாதன் தலைமையிலான 15 பேர் கொண்ட குழுவினர் நாகை துறைமுகம், கீச்சாங்குப்பம், அக்கரைப்பேட்டை உள்ளிட்ட கடலோர பகுதிகளில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு கண்காணித்துவந்தனர். அப்போது நாகை துறைமுகம் அருகே ஒரு படகில் கஞ்சா மூட்டைகளை ஏற்றிக்கொண்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. உடனடியாக சுங்கத்துறை அதிகாரிகள் அங்கு விரைந்து வந்துள்ளனர். அதிகாரிகள் வருவதை அறிந்த கடத்தல்காரர்கள், கஞ்சாவை படகிலேயே விட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இதையடுத்து, படகைச் சுற்றி வளைத்த சுங்கத்துறை அதிகாரிகள் படகில் இருந்த 280 கிலோ கஞ்சா அடங்கிய 10 மூட்டைகளைப் பறிமுதல் செய்தனர். அதோடு கடத்தல்காரர்கள் விட்டுச் சென்ற 4 இருசக்கர வாகனங்கள், இரண்டு வலைகள், ஒரு ஐஸ் பெட்டி மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர். கடத்தப்படவிருந்த கஞ்சா மூட்டைகளின் சர்வதேச மதிப்பு ஒரு கோடி ரூபாய் இருக்கும் என்கிறார்கள். கஞ்சா பொட்டலங்கள் அனைத்தும் இலங்கைக்குப் படகு மூலம் கடத்தவிருந்தது விசாரணையில் தெரியவந்திருக்கிறது. மேலும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு, கடல் மற்றும் கடல் சார்ந்த உணவு உள்ளிட்டவற்றை மையமாகவைத்து இயங்கும் பிரபல யூடியூப் சேனல் நடத்துபவரின் குடும்பத்தினருக்கு சொந்தமானது என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## மயிலாடுதுறையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பிறந்தநாள் விழா



மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ராஜகுமார் அறிவுறுத்தலின் படி மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 94 ஆவது பிறந்த தினவிழா மயிலாடுதுறையில் கொண்டாடப்பட்டது. காமராஜர் மாளிகையில் அவரது திருஉருவப் படத்தை அலங்கரித்து, மயிலாடுதுறை நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் யூ. ராமானுஜம் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர்கள் மிலிட்டரி செல்வராஜ், முத்துசுவாமிநாதன், காளிதாஸ், ஹாஜீ நீ. அந்தோனிசாமிபுத்தகரம் சுமதி, குமார், எத்திராஜலு, கல்யாண சுந்தரம், தீன தயாளன், மனோ , பார்த்திபன் செந்தமிழன் ராம் ஆகியோர் முன்னிலையில் நடிகர் திலகம் திருஉருவப் படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து கிட்டப்பா அங்காடியில் மாவட்ட சிவாஜி மன்ற சமூக பேரவைத்தலைவர் மூவலூர் ரங்கநாதன் தலைமையில், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் யூ. ராமானுஜம், ஐயப்பன் ராஜேந்திரன், நவாஸ், கமலநாதன், மதிவாணன், ராஜா, லோகநாதன், ஆகியோர் முன்னிலையில் நாட்டுப்புறக் கலைஞர் கிங் ஃபைசல் சிவாஜியின் வேடமணிந்து நகரின் முக்கிய வீதிவழியாக மேள வாத்தியங்கள் முழங்க கிட்டப்பா அங்காடிக்கு வந்து அங்கு அலங்கரித்து வைத்திருந்த சிவாஜிகணேசனின் உருவப்படத்திற்கு மரியாதை செய்தனர். இந்நிகழ்ச்சியில் பண்ணை சொக்கலிங்கம், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் ஜெகவீரபாண்டியன், தலைமை கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறையில் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம்




மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் திங்கட்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 4.10.2021 மாவட்ட ஆட்சித்தலைவர் ஆட்சித்தலைவர் இரா.லலிதா தலைமையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் பொதுமக்கள் பட்டாமாறுதல், புதிய குடும்ப அட்டை, ஆக்கிரமிப்பு அகற்றுதல், கல்விக்கடன், வீட்டுமனைப்பட்டா, முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்த 72 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் அளித்தனர். பொதுமக்களிடம் விசாரித்து மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. லலிதா சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை வழங்கி குறித்த காலத்திற்குள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சோ.முருகதாஸ், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சு.முருகண்ணன் (துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம்)) வாசுதேவன், வருவாய் கோட்டாட்சியர்கள் (மயிலாடுதுறை) பாலாஜி, (சீர்காழி) நாராயணன் உள்பட பல்வேறு துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை: ஜோதி பவுண்டேஷன் சார்பில் ஐந்தாம் கட்ட பனை விதை நடும் விழா.!



மயிலாடுதுறை மாவட்டத்தில் அரசு அங்கீகாரம் வழங்கிய பனை விதையினை மயிலாடுதுறையிலிருந்து வானாதராஜபுரம், அஞ்சலாறு, கதிராமங்கலம் வரை நேற்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு ஜோதி பவுண்டேஷன் நிறுவனர் ஜோதி ராஜன் முன்னிலையில் பனை விதை நடவு செய்யப்பட்டது. மனிதத்தையும் மண்ணையும் காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஜோதி பவுண்டேஷன் சார்பில் ஐந்தாம் கட்டமாக பனை விதையினை நடவு செய்யப்பட்டது. நிகழ்வில் பனை விதையின் பலன்கள் நீர்வளம் மண் வளம்காப்பது குறித்து மாணவர்களிடமும் பொதுமக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தபட்டது. நிகழ்வில் ஜோதி பவுண்டேஷன் செயலாளர் மணிகண்டன் பொருளாளர் செந்தூர், செந்தில்நாதன், உறுப்பினர்கள் சமூக சேவகி கவிதா ஆசிரியை ஜெயந்தி ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவிகள் சமூக ஆர்வலர்கள், மற்றும் பொதுமக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு